<u>**DEPOSITION OF WITNESS**</u>

(CHAPTER XXIII CODE OF CIVIL PROCEDURE)

IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUNELVELI

M.C.O.P. No.14/2024 & 229/2024

DEPOSITION OF WITNESS FOR PW-1

NAME : திருமதி. ரேவதி

Husband's NAME : திரு.செந்தில்குமார்

VILLAGE : குச்சிக்காடு

TALUK : மேல ஆத்துார்

CALLING : மனுதாரர் தரப்பு சாட்சி

AGE : 41

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 17th day of July 2025.

<u>முதல் விசாரணை</u> :–

நான் இம்மனுவின் 1ம் மனுதாரர் ஆவேன். எனது சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். முதல் தகவல் அறிக்கை நகல் ம.சா.ஆ.1. பிரேத பரிசோதனை அறிக்கை ம.சா.ஆ.2. NL 01B 1413 1ம் எதிர்மனுதாரர் பேருந்தின் ஆர்.சி.புக் ம.சா.ஆ.3. NL 01B 1413 1ம் எதிர்மனுதாரர் பேருந்தின் பாலிசி ம.சா.ஆ.4. NL 01B 1413 1ம் எதிர்மனுதாரர் பேருந்தின் MVI report ம.சா.ஆ.5. மாதிரி வரைபடம் ம.சா.ஆ.6. குற்ற இறுதி அறிக்கை ம.சா.ஆ.7. தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்ட Trade certificate ம.சா.ஆ.8(எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது). சம்பள பட்டியல் ம.சா.ஆ.9(எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபனையுடன் குறியீடு

செய்யப்படுகிறது). வாரிசு சான்றிதழ் ம.சா.ஆ.10. 1ம் மனுதாரர் ஆதார் அடையாள அட்டை ம.சா.ஆ.11. 1ம் மனுதாரர் வங்கிக்கணக்கு புத்தகம் ம.சா.ஆ.12. 1ம் மனுதாரர் பான் கார்டு ம.சா.ஆ.13. 2ம் மனுதாரர் ஆதார் அடையாள அட்டை ம.சா.ஆ.14. 2ம் மனுதாரர் வங்கிக்கணக்கு புத்தகம் ம.சா.ஆ.15. 3ம் மனுதாரர் ஆதார் அடையாள அட்டை ம.சா.ஆ.16. 3ம் மனுதாரர் வங்கிக்கணக்கு புத்தகம் ம.சா.ஆ.17. 4ம் மனுதாரர் ஆதார் அடையாள அட்டை ம.சா.ஆ.18. 4ம் மனுதாரர் வங்கிக்கணக்கு புத்தகம் ம.சா.ஆ.19. மனுப்படி தீர்ப்பாக வேண்டிக்கொள்கிறேன்.

2, 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை :

விபத்தில் இறந்துபோன செந்தில்குமார் எனது கணவர் ஆவார். நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.8 ஆவணம் எனது கணவர் ஓராண்டு காலம் வியாபாரம் சம்மந்தமாக படித்தற்கான சான்றிதழ் என்றால் சரிதான். ம.சா.ஆ.9 ஆவணம் Pay slip இல்லை. ஆனால் அது எனது கணவர் சேலை செய்த நிறுவனத்தில் இருந்து வழங்கப்பட்ட சம்பள சம்மந்தமான ஆவணம் என்றால் சரிதான். என் கணவருக்கு வேலை பார்க்கும்போது சம்பளத்தை நிறுவனத்தில் இருந்து ரொக்கமாக கொடுத்தார்கள். என் கணவர் வேலை பார்த்த நிறுவனத்தில் இருந்து சம்பளம் ரூ.27,620/-த்தை ரொக்கமாக பெற்றுக்கொண்டார் என்பதற்கு ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது கணவர் ITI ல் படித்து பின்பு DCW கம்பெனியில் Field Engineer ஆக வேலை பார்த்து வந்தார் என்பதைக்காட்டக்கூடிய ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது கணவர் வருமான வரி எதுவும் செலுத்தினாரா என்றால் இல்லை. என்னுடைய பிரமண வாக்குமூலம் மற்றும் மனுவில் கூறியுள்ளபடி விபத்து நடைபெறவில்லை என்றால் சரியல்ல. விபத்து

சமயத்தில் 1ம் எதிர்மனுதாரின் ஓட்டுநர் சாலை விதிகளை கடைபிடித்து மெதுவாக தான் வாகனத்தை இயக்கினார் என்றும் என் கணவர் தான் பின்னால் வரும் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை கவனிக்காமல் திடீரென வலதுபக்கமாக திரும்பியதால் இந்த விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்திற்கு காரணம் என் கணவர் தான் என்று சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை ஓட்டிய ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனத்தை இயக்கியதால் காப்பீட்டு நிறுவன விதிமுறைகள் மீறப்பட்டுள்ளதால் 2,3 எதிர்மனுதாரர்கள் மனுதாரர்களாகிய எங்களுக்கு எந்த வித நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளின் கீழ் அதிகமான நஷ்டஈடு கோரியுள்ளேன் என்றும் அது எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் தற்போது எந்த வேலையும் செய்யவில்லை. நான் தனியார் வேலை செய்து வருவதாகவும், தற்போது வழக்கிற்காக வேலை செய்யவில்லை என்றும் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

# **DEPOSITION OF WITNESS**

(CHAPTER XXIII CODE OF CIVIL PROCEDURE)

IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUNELVELI

M.C.O.P. No. 14/2024 & 229/2024

DEPOSITION OF WITNESS FOR PW-2

| | | |
|---|---|---|
| NAME | : | திருமதி. மூக்கம்மாள் |
| Husband's NAME | : | திரு.சுப்பையா |
| VILLAGE | : | நரசிங்கன்விளை |
| TALUK | : | மேல ஆத்துார் |
| CALLING | : | மனுதாரர் தரப்பு சாட்சி |
| AGE | : | 59 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 17th day of July 2025.

முதல் விசாரணை :–

நான் இம்மனுவின் 1ம் மனுதாரர் ஆவேன். எனது சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். இறந்துபோன சுப்பையாவின் பிரேத பரிசோதனை அறிக்கை ம.சா.ஆ.20. வாரிசு சான்றிதழ் ம.சா.ஆ.21. 1ம் மனுதாரர் ஆதார் அடையாள அட்டை ம.சா.ஆ.22. 1ம் மனுதாரர் வங்கி கணக்கு புத்தகம் ம.சா.ஆ.23. 2ம் மனுதாரர் ஆதார் அடையாள அட்டை ம.சா.ஆ.24. 2ம் மனுதாரர் வங்கி கணக்கு புத்தகம் ம.சா.ஆ.25. 3ம் மனுதாரர் ஆதார் அடையாள அட்டை ம.சா.ஆ.26. 3ம் மனுதாரர் வங்கி கணக்கு புத்தகம் ம.சா.ஆ.27. 4ம் மனுதாரர் ஆதார் அடையாள அட்டை ம.சா.ஆ.28. 3ம் மனுதாரர் வங்கி கணக்கு புத்தகம் ம.சா.ஆ.29. 5ம்

மனுதாரர் ஆதார் அடையாள அட்டை ம.சா.ஆ.30. 5ம் மனுதாரர் வங்கி கணக்கு புத்தகம் ம.சா.ஆ.31.

2,3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்குவிசாரணை :

விபத்தில் இறந்துபோன சுப்பையா எனது கணவர் என்றால் சரிதான். எனது கணவரின் வயது, வேலை, வருமானம் காட்டக்கூடிய ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. விபத்து குறித்து மனுவிலும், பிரமண வாக்குமூலத்திலும் கூறியுள்ளவாறு 1ம் எதிர்மனுதாரர் பஸ் ஓட்டுநரின் கவனக்குறைவால் இந்த விபத்து நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது கணவர் தான் சாலை விதிகளை கடைபிடிக்காமாலும், பின்வரும் வாகனத்தை கவனிக்காமல் திடீரென வலதுபுறமாக ரோட்டில் திரும்பி கடக்கும்போது இந்த விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. விபத்திற்கு முழுக்காரணம் எனது கணவர் தான் என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளின் கீழ் நான் அதிகமான நஷ்டஈடு கோரியுள்ளேன் என்றும் அது எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை ஓட்டிய ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனத்தை இயக்கியதால் காப்பீட்டு நிறுவன விதிமுறைகள் மீறப்பட்டுள்ளதால் 2,3 எதிர்மனுதாரர்கள் மனுதாரர்களாகிய எங்களுக்கு எந்த வித நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.